ஜூலை-2023-ஆம் மாதத்திற்கான
சம்பளம் வழங்கும் அதிகாரம்
(Pay Authorization for the month of
July 2023)

பள்ளிக் கல்வித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

கடித எண்.9756/பக7(1)/2023 – 2, நாள் 07.08.2023

அனுப்புநர்
திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை – 18/35
முதன்மைச் செயலர்/கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15
அனைத்து மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்
சார் சம்பளக் கணக்கு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை – 03.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – மேல்நிலைப் பள்ளி – கணினி பயிற்றுநர் நிலை–1&2– 1880 தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன – தற்போது பணிபுரிந்து வரும் 1839 கணினி பயிற்றுநர் நிலை–1&2– பணியிடங்களுக்கு ஜூலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை நிலை எண்.187 பள்ளிக் கல்வித் (மேநிக–2) துறை, நாள்.04.10.2006
2. அரசாணை(1டி) எண்.85 பள்ளிக் கல்வித் (பக7(1)) துறை, நாள்.25.06.2020.
3. பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதம் ந.க.எண்.000614/ எல்3/2020, நாள்.26.12.2022.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.000614/ எல்3/2020, நாள்.26.07.2023.

--------

பார்வை 1–இல் காணும் அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட்ட 1880 கணினி பயிற்றுநர் நிலை–2 பணியிடங்களில், அரசாணை (நிலை) எண்.26, பள்ளிக் கல்வி (ப.க.7(1)) துறை, நாள்.12.02.2019–ன்படி கணினி பயிற்றுநர் நிலை–I ஆக தரம் உயர்த்தப்பட்ட 403 பணியிடங்கள் மற்றும் பல்வேறு காரணங்களால் பயன்படுத்தாமல் உள்ள 14 பணியிடங்கள் போக மீதமுள்ள 1463 கணினி பயிற்றுநர் நிலை–2 பணியிடங்களுக்கு பார்வை 2–இல் காணும் அரசாணையின்படி 01.01.2020 முதல் 31.12.2022 வரை மூன்றாண்டுகளுக்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 1463 கணினி பயிற்றுநர் நிலை–2 தற்காலிக பணியிடங்களுக்கு

(த.பி.பா)

01.01.2023 முதல் 31.12.2025 வரை மூன்றாண்டுகளுக்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்க பார்வை 3இல் காணும் கடிதத்தில் பள்ளிக் கல்வி ஆணையர் அரசைக் கோரியிருந்தார். ஏற்கனவே 01.01.2023 முதல் 31.03.2023 வரை 3 மாதங்களுக்கு துறைத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் மேற்காண் 1463 கணினி பயிற்றுநர் நிலை-2 பணியிடங்களுக்கு தொடர்ந்து ஊதியம் பெற அனுமதிக்கப்பட்டது என்றும், ஏப்ரல், மே மற்றும் ஜூன் 2023ஆம் மாதத்திற்கு அரசால் ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில், தற்போது அரசாணை (நிலை) எண்.187 பள்ளிக் கல்வி (மேநிக-2) துறை, நாள்.04.10.2006ன்படி தோற்றுவிக்கப்பட்ட 1880 பணியிடங்களில் இன்றைய நிலவரப்படி 1619 பணியிடங்கள் கணினி பயிற்றுநர் நிலை-1 ஆசிரியர்களும், 220 பணியிடங்களில் கணினி பயிற்றுநர் நிலை-11 ஆசிரியர்களும் பணியாற்றி வருவதால், மேற்கண்ட பணியிடங்களுக்கு ஜூலை - 2023-ஆம் மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குமாறு பார்வை 4-இல் கண்ட கடிதத்தில் அரசைக் கோரியுள்ளார்.

3. இந்நேர்வில் 1463 கணினி பயிற்றுநர் நிலை-2 பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவானது, அரசாணை (டி) எண். 271, நிதி (சிஎம்பிசி) துறை, நாள்.18.08.2022-ன்படி அமைக்கப்பட்ட குழுவின் முன் 09.03.2023 அன்று வைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், தற்போது பள்ளிக் கல்வி இயக்குநரால் கோரப்பட்டுள்ள இணைப்பில் காணும் 1839 கணினி பயிற்றுநர் நிலை-1 மற்றும் 2 பணியிடங்களுக்கு ஜூலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay authorization) வழங்கப்படுகிறது. மேற்கண்ட பணியிடங்களுக்கு ஜூலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு சார்புச் செயலாளர்,
அரசு முதன்மைச் செயலாளருக்காக

**நகல்**

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்